பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
"ராஜ்கோபால்ஸ்"
(பட்டுச் சேலைகளின் காட்சியகம்)
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை
ரூ 2. 50

ஜவுளி வியாபாரிகளுக்கு
ஓர் நற்செய்தி!
"பூகோட்"
தயாரிப்புக்களின்
பிடவைத்தினுசுகளுக்கு
வடமாகான ஏக
விநியோகஸ்தர்கள்
"ராஜ்கோபால்ஸ்"
பூகோட் மொத்த,
சில்லறைவிற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுபகர்: 4 விபவ வருஷ மாசி மீ 11 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 றஜப் பிறை 15 (22.02.1989) UTHAYAN -A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்-67

கொழும்புப் பகுதியில் வளரும் வன்செயல்கள்

பல இடங்களில் நேற்று குண்டு வீச்சும், தீ வைப்பும்

கொழும்பு, பெப்ரவரி 22

கொழும்பு மாநகர் அதன் சுற்றுப்புறங்கள் உட்பட தென்பகுதியில் நாளாந்தம் வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன.

ஜே. வி. பியினர் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்த நேற்றைய தினம் பல இடங்களில் தீ வைப்புச் சம்பவங்களும், குண்டு வீச்சுச் சம்பவங்களும் இடம்பெற்றன. 12 பேருக்கு மேல் கொலையுண்டதாக அறிவிக்கப்பட்டது.

கொழும்பில் நுகேகொடையிலும், பாணந்துறை, மஹரகம ஆகிய பகுதிகளிலும் மற்றும் சில இடங்களிலும் நேற்று அரசாங்க ஆதரவாளர்களுக்குத் தீ வைக்கப்பட்டன மொத்தம் ஒன்பது பஸ்கள் எரிந்து நாசமாகின.

கொழும்பு மாநகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் குண்டுகள் வீசப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜே.வி.பியினர் நேற்று நடத்திய அரசு எதிர்ப்பு வேலைநிறுத்த நடவடிக்கையின்போது பின்வரும் அசம்பாவிதங்கள் நடைபெற்றதாக அறியவந்தது:-

★ கொழும்பு நகரில் அடுத்தடுத்து 4 குண்டுகள் வெடித்தன.

★ கொழும்பு நகரில் நேற்று இம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 4 பேர் கொல்லப்பட்டனர் ஒன்பது பேர் காயமடைந்தனர்.

★ தென்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களில் 8 பேர் கொல்லப்பட்டனர்.

★ காலி நகரில் குண்டு ஒன்று வெடித்ததில் 5

(6 ஆம் பக்கம் பார்க்க)

வாசகர்களுக்கு

இம்மாதம் பத்தாம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை, உதயன், சஞ்சீவி பத்திரிகைகள் பிரசுரமாகவில்லை என்பதை வாசகர்களுக்கு வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

— நிர்வாகிகள்

மீண்டும் பணப்புழக்கம்

யாழ்ப்பாணம் பெப்21

மக்கள்வங்கியின் கன்னாதிட்டி நவீன சந்தைகளில் இன்றுமுதல் மீண்டும் பணப்புழக்கம் மேற்கொள்ளப்படும்.

(உ-10)

ஜி.சி.ஈ. பரீட்சைகள்: ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜீ. சி. ஈ. சாதாரணதர பரீட்சைகள் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன.

நாளை மறுதினம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பழைய பாடத்திட்ட ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை ஆரம்பமாகிறது.

புதிய பாடத்திட்ட ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை 25 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இந்த இரண்டு பரீட்சைகளுக்கும் யாழ் மாவட்டத்தில் இருந்து மொத்தம் 34 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் 228 பரீட்சை மண்டபங்களில் பரீட்சைகள் நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதிக் காட்டுக்கள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதிக் காட்டுகளும் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன (ஒ-10)

பரீட்சார்த்திகளின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், பெப் 22

பழைய பாடத்திட்டத்தின்படி ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை எழுதும் பரீட்சார்த்திகள் தமக்கு அனுமதி காட்டுக்கள் கிடைக்காவிடின் உடனடியாக பரீட்சைத் திணைக்களம் ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பரீட்சார்த்திகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கமிட்டி நியமனம்

கொழும்பு, பெப் 22

விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் காணப்படும் குறைபாடுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க கமிட்டி ஒன்றை சுதந்திரக்கட்சி நியமிக்கவிருக்கிறது.

இந்தகவலை சுதந்திரக் கட்சிப்பிரமுகர் அனுருத்த ரதவத்தை தெரிவித்தார்.

(ஒ-எ)

முச்சந்தி முரளி

வன்செயல்கள் வளருகிற வேகத்தைப் பார்த்தால் புதிய ஜனாதிபதியாகும் ஜே.வி.பியை வளர்த்துக் கொண்டுவர முடியாது போலேதான் இருக்குது...!

ஒரு பகுதி அடகு நகைகள் இவ் வாரத்தில் வரும்

யாழ்ப்பாணம், பெப் 22

மக்கள் வங்கியின் வடபகுதி கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளில் மற்றொருதொகுதி இந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் வந்து சேரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இங்கு கொண்டுவரப்பட்ட அடகு நகைகளை உரியவர்களுக்கு விநியோகிக்கும் வேலைகள் பூர்த்தியாகும் கட்டத்தில் இருப்பதாகவும் வங்கி உயரதிகாரிகள் தெரிவித்தனர்.

அடுத்த கட்டத்தில் கொண்டுவரப்படவுள்ளவை நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கன்னாம், காங்கேசன்துறை வங்கிக் கிளைகளில் அடகு வைத்தவர்களின் நகைகள் என்றும் —

மார்ச் முதல் வாரத்தில் உரியவர்களுக்கு இந்த நகைகள் மீளளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது

(உ-10)

புதிய சபாநாயகர் எம்.எச்.முஹம்மது?

கொழும்பு, பெப் 22

புதிய நடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் முன்னாள் அமைச்சர் எம். எச் முஹம்மது நிறுத்தப்படுவார் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசுத் தலைவர்கள் இது சம்பந்தமாக அல்ஹாஜ் முஹம்மதுவுடன் பேச்சு நடத்தி, அவரது சம்மதத்தைப்பெற்றனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற ஜனாப் முஹம்மத் நாடாளுமன்ற அரசியலில் நீண்ட கால அனுபவம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சிகளின் சார்பிலும் சபா நாயகர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கோபாலசாமி எம். பி. இலங்கை விஜயம்

கருத்துத் தெரிவிக்க கலைஞர் மறுப்பு

சென்னை, பெப் 22

தி.மு.க. எம். பி திரு. கோபாலசாமி இலங்கை சென்றிருப்பதாக நேற்று சென்னையில் அறிவிக்கப்பட்டது.

ஆனால் அது குறித்துத் திட்டவட்டமான தகவல் எதையும் தெரிவிக்க முதலமைச்சர் கருணாநிதி மறுத்துவிட்டார்.

தமிழ்நாடு சட்டசபையில் திரு. கருணாநிதி இது குறித்துத் தெரிவித்ததாவது:-

திரு. கோபாலசாமி இலங்கை சென்றிருப்பது பற்றி கட்சிக்குத் தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. தமிழக அரசுக்கும் சொல்லப்படவில்லை. முதலமைச்சர் என்ற முறையில் நானும் அவரை இலங்கைக்கு அனுப்பி வைக்கவில்லை.

பிரதமர் ராஜீவ் காந்தி, வெளிவிவகார இணை அமைச்சர் நட்வர் சிங் ஆகியோருடன் இலங்கை நிலைமை குறித்துப் பேசியிருக்கிறேன். இப்பேச்சுத் தொடரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

தேசிய பட்டியல் மூலம் அமிர் எம். பியானர்

கொழும்பு, பெப் 22

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஜனாப் எச். ஏ புஹாரீனும் சம்பந்தப்பட்ட கட்சிகளின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு எம்பிக்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டிசில்வா இதனை நேற்று அறிவித்தார். (உ-எ)

மாகாண அரசுக்கு தனியான திறைசேரி

வடக்கு, கிழக்கு மாகாண அரசுக்கென தனியான ஒரு திறைசேரியும், பொதுச்சேவை ஆணைக்குழுவும் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் செயலகத்தில் வைத்து இந்திறை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

திறைசேரியின் செயலாளராக திரு வி எஸ். சோமசுந்தரம், ஏனைய உறுப்பினர்களாக திரு எஸ் மகேந்திரன், வி. நாராசா ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். திருசோமசுந்தரம் முன்னர் கொழும்பில் திறைசேரியில் உயர்பதவியில் இருந்தவர்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் விபரம் வருமாறு:-

தலைவர்:- திரு கே. நாகலிங்கம்.

செயலாளர்:- திரு. எஸ் வினாயகலிங்கம்.

ஏனைய உறுப்பினர்கள்:- திரு எம் செவராசா, திரு. ஏ. ஐ. ஒமார்தீன். (உ-150)

பாலைதீவு, கச்சதீவு உற்சவங்கள் ரத்து!

குருநகர், பெப். 22

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த பாலைதீவு, கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவங்கள் இம்முறை நடைபெறமாட்டாதென அறிவிக்கப்படுகிறது.

மேற்படி உற்சவங்கள் வருடந்தோறும் மார்ச் மாத முதல் வாரம் பாலைதீவு ஆலயத்திலும், இரண்டாம் வாரம் கச்சதீவு ஆலயத்திலும் நடைபெறுவது வழக்கம்.

இதன்படி பாலைதீவில் மார்ச் 5 ஆம் திகதியும் கச்சதீவில் 12 ஆம் திகதியும் இவ்வுற்சவங்கள் ஆரம்பமாக விருந்தன.

நாட்டில் ஏற்படுள்ள குழப்பநிலை காரணமாக கடந்த ஐந்து வருடங்களாக பாலைதீவு, கச்சதீவு உற்சவங்கள் நடைபெறாது தெரிந்ததே.

இவ்வருட உற்சவங்கள் குறித்து யாழ். ஆயர் அதி-வண கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையிடம் கேட்டபோது இவ்வருட உற்சவங்கள் நடைபெறமாட்டாதென்று அவர் தெரிவித்தார்.

(உ-51)

ஹெலி மூலம் தீ அணைப்பு

கொழும்பு, பெப்.22

நுவரெலியா மாவட்டத்தில் கிகிலியா மாணந்த காட்டுத் பிடித்த தீ ஹெலிக்கொப்டர்களின் உதவியுடன் நேற்று அணைக்கப்பட்டது.

அக்கரப்பத்தன பகுதியில் இருந்து திபரவ ஆரம்பித்தது 200 ஏக்கர் வரையிலான காடு தீக்கிரையானது. உயிரழப்புக்கள் ஏற்படவில்லை. (எ)

நான்கு ஜவான்கள் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம். பெப் 22

கடும் காயங்களுடன் நான்கு அமைதிப்படை ஜவான்கள் நேற்றிரவு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டதாக பிந்திக் கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

இவர்கள் நிலக்கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் காயமடைந்திருக்கலாம் எனத் தெரியவருகிறது.

இதனிடையில், யாழ் நகரை அண்டிய பகுதியில் நேற்றிரவு சுமார் 9.30 மணியளவில் பெருங் குண்டு வெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது (ஒ)

சுபநேரம்

22 02-1989
மாசி-11
புதன்கிழமை

சுபநேரம்:
7.30 முதல் 09 00வரை
நாகுகாலம்:
12. 31முதல் 03.01வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

திருகோணமலை மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனத் திட்டம்

செயற்படுத்தும் முயற்சியில் நிபுணர் குழு

திருகோணமலை, பெப் 22

திருகோணமலையில் பாரிய நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றையும், அபிவிருத்தித் திட்டம் ஒன்றையும் செயற்படுத்தும் முயற்சியில் வெளிநாட்டு பிரநிதிகள் அடங்கிய நிபுணர் குழு ஒன்று ஈடுபட்டு வருகிறது.

திருகோணமலை, கந்தளாய், அல்லை ஆகிய விவசாயப் பகுதிகளைக் கொண்ட பிரதேசத்தில் நீர்ப்பாசனத் திட்டம் செயற்படுத்தப்படவிருக்கிறது.

18 பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்று இத்தத் திட்டத்தை வகுத்து செயற்படுத்தும். இந்த நிபுணர் குழுவில் ஐந்து பிரித்தானியர்களும், நான்கு ஜப்பானியர்களும், மூன்று உள்நாட்டு அதிகாரிகளும் இடம்பெறுகின்றனர்.

இந்த நிபுணர் குழுவினர் முதல் நடவடிக்கையாக திருகோணமலை, கந்தளாய், அல்லைப் பகுதிகளை அண்மையில் பார்வையிட்டனர்.

நிபுணர் குழுவோடு வடக்கு, கிழக்கு மாகா

(6 ஆம் பக்கம் பார்க்க)

திங்களன்று நகரில் இருவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை இரண்டு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

திங்கட்கிழமை மாலை ஐந்துமணி அளவில் நல்லூர் செட்டித் தெருவில் இராசதுரை நியாகராசா (வயது 27) என்பவரும்—

ஐந்துமுப்பது மணி அளவில் கந்தர்மடம் பகுதியில் சின்னத்தம்பி ரவிச்சந்திரன் [வயது 19] என்ற இளைஞரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இருவரது சடலங்களும் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது.

[உ-10]

அரச எம்.பிக்கள் கூட்டம் இன்று இல்லை

அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று நடைபெறும் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்தி தவறானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச நாடாளுமன்றக் குழுவின் செயலாளர் அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் இம் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைய கலைமுறையின் இதயம் நாளும் வளரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள், கட்டில்கள், Divon Hall Sets அலுமாரிகள், Dressing Table [Three Mirrors] மேசைகள், Kitchen பொருள்கள் எவர்சில்வர், Brass பொருள்கள் டிராரங்கள், பெட்டகம் Linen Almairah Screen Dinnersets Drawing room Set, திருமதி த சங்கரப்பிள்ளை, கனகசபைரோட், மானிப்பாய் (9601)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள் சேவற்கோழிகள், சூப்குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தஞ் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர். (C/1182)

கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை கிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், கிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet கிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [C/1181]

தேவை

மணப்பெண் தேவை

B Sc விஞ்ஞான பட்டதாரி ஆசிரியருக்கு 33 வயதிற்குட்பட்ட யாழ். இந்து வேளாளகுல மணப்பெண் தேவை. விஞ்ஞான / கலை பட்டதாரி, கணக்கியல், கம்பியூட்டர்துறையைச்சேர்ந்தவர்கள் விரும்பப்படுவர். சீதனம் பேசித்தீர்க்கலாம் சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 441, மே / பா உதயன், யாழ்ப்பாணம். (9307)

WANTED

A fully or Partly qualified obstertrician salary Negotiable according to qualifications and experience please apply to medical superintendent MC leod Hospital, Inuvil, Chunnakam. (C1656)

சேவை

Type writers- தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சாரநிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [Samy & Co - Shabra அருகாமையில்] [C/1362]

காணவில்லை

மாநகர சபை நூலகத்தில் இரவல் பெறப்பட்ட ஆகதி Night in Lis Bon ஆகிய இரு நூல்கள் ஞாயிறு பகல் 11 மணியளவில் நல்லூர்-பெருமாள் கோவிலடிக் கிடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கூடிய விரைவில் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (9602)

PHARMACY CLASSES

பார்மஸி பயிற்சி நெறிகள்

Diploma in Pharmacy Course

ஆரம்பம்: **25th February** 1989

* வெளிநாட்டு உள்நாட்டு வேலைவாய்ப்புக்கு
* அரசாங்க தகுதி பெற
* மேல்படிப்பைத் தொடர

உகந்த பயிற்சி நெறி உங்கள் பதிவுகளுக்கு

North Ceylon Technical Institute

14 St. Peters Lane, Hospital Road,
JAFFNA.

(C-1665)

VACANCY

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

1. Saudi - சவூதி

1.	Cleaner	—	425 SR	With Food
2.	Mason	—	650 SR	
3.	Carpenter	—	650 SR	
4.	Plumper	—	650 SR	
5.	Electrician	—	650 SR	
6.	Welder		650 SR	
7.	Tinker	—	650 SR	
8.	Painter	—	650 SR	
9.	Driver (H. V. Duty)	—		
10.	Auto Elec.	—		
11.	Mechanic	—		

வயது 21 முதல் 45 வரை

2. Taiwan - தைவான்

வயது 18 முதல் 30 வரை. ஆங்கில அறிவு வேண்டும்

3. Beirut - பெய்ரூட்

வயது 18 முதல் 40 வரை

4. Kuwait - குவைற்

1.	Cleaners	35 KD	No Food
2.	Driver (Heavy)	50 KD	With Kuwait of
3.	Driver (House)	40 KD	Gulf Licence.

Kuwait

1.	Bulldozer Operator புல்டோசர் ஒப்பரேற்றர்	5	—	90 K D
2.	Tiper Truck Driver ரிப்பர் றக் றைவர்	5	—	85 K D
3.	Dumper / Loader Operator டம்பர் / லோடர் ஒப்பரேற்றர்	5		90 K D
4.	Divers (சுழியோடிகள்)	30	—	70 K D
5.	Heavy Equp Mech (Disel) கனரக வாகன மெக்கானிக் (டீசல்)	1	—	K D
6.	Asst. Mech (Disel) உதவி மெக்கானிக் (டீசல்)	4	—	75 K D
7.	Marine Supervisor Caple of under Worker Civil Worker மராயன் மேற்பார்வையாளர் கீழ் தன வேலையாளர்	1	—	125 K D
8.	Black Smith (Door / Winders)	3	—	85 K D
9.	Merudez Benz Mechanic பென்ஸ் கார் திருத்துபவர்	1	—	85 K D
10.	Steel Fabricator	3	—	85 K D
11.	Welders (Arc / Oxy)	2	—	85 K D
12.	Hydrulic Mechanic H V. Y. Duty	2	—	85 K D
13.	Mechanical Engineer Draughtment	1	—	230 K D
14.	Car Electrician	1	—	85 K D

வயது 20 — 45 வரை. 5 வருட அனுபவச் சான்றிதழுடன், பாஸ்போட், 3 படம் என்பவற்றுடன் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

5. House maid Kuwait & Saudi

Cleaners - Female

ஆகிய வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் பின்வரும் முகவரியில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

T. V. TRAVELS,

BROWN ROAD, KOKUVIL.

Branch:-

1. K. NAVARATNAM,
   19, Sivan Pannai Road,
   Koddady, Jaffna.
2. KARALASINGAM (Yappan),
   No, 25, Karaikaddu Lane,
   Vannarpannai, Jaffna.
3. S. KUGANANTHARAJAH,
   Thanneerottu,
   Mulliyawalai.

(C/1651)

புதிய தொழில் பயிற்சி நெறிகள்

Radio, T. V. & Deck

ஆரம்பம் 25-2-89

Air Condition and Refrigeration

ஆரம்பம் 25-2-89

இத்துடன்

Motor Winding and Wiring

ஆரம்பம் 24-2-89

உங்கள் பதிவுகளுக்கு

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peter's Lane,
Hospital Road,
[C/1663] JAFFNA.

அமய சுத்திகரிப்புத் தொழிலாளர் வெற்றிடம்

யாழ் சுகாதாரசேவைகள் பணிப்பாளர், அமய சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிகளுக்கு பின்வரும் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோருகின்றார்.

வயது: 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை: எழுத வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.

வெற்றிடங்கள்: கிளிநொச்சி, பூநகரி, சங்கானை உடுவில், கோப்பாய், தெல்லிப்பளை, பண்டை, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளமையினால் அப்பிரிவு விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள், முழுப்பெயர், விலாசம், வயது, தகைமை என்பனவற்றை உள்ளடக்கியதாக முழுத்தாள் அளவிலான கடதாசியில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 01—03—89க்கு முன் கிடைக்கக்கூடியதாக (நேரிலோ அல்லது தபால் மூலமோ) அனுப்புதல் வேண்டும்.

ந. கனகசபை,
உ சே பி பணிப்பாளர்,
உ சே பி பணிமனை, யாழ்ப்பாணம்
விக்டோறியா வீதி,
யாழ்ப்பாணம். (C/1198)

உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

* Kuwait குவைத்

5 கிழமைகளில் பிரயாணம்

1.	Rotating Equipment Engineer	250 KD	3 பேர்
2.	Plant Condition Monitoring Engineer	250 KD	ஒருவர்
3.	Mechanical Engineer Shops	250 KD	ஒருவர்
4.	Supervisor Field	105 KD	3 பேர்
5.	,, Rigging	105 KD	ஒருவர்
6.	,, Mechining	105 KD	ஒருவர்
7.	,, Welding&Fabn	105 KD	இருவர்
8.	Field Maintenance Mech grade - 2	70 KD	70 பேர்
9.	Machinary Mechanic grade - 2	70 KD	54 பேர்
10.	Machinist	55 KD	8 பேர்
11.	Bench fitter	55 KD	2 பேர்
12.	Welder grade 2	60 KD	7 பேர்
13.	Fabricator Mechanic grade 2	60 KD	ஒருவர்
14.	Rigger/Scattolder grade -2	50 KD	15 பேர்
15.	Crane Operator	60 KD	6 பேர்
16.	Heavy equipment Driver	60 KD	9 பேர்
17.	Insulator	45 KD	3 பேர்
18.	Mason / Gunniter helper	45 KD	4 பேர்
19	Coke Supervisor	105 KD	4 பேர்
20.	Coke Drum Mechanic grade - 2	65 KD	18 பேர்
21	Conveyor Mechanic grade - 2	60 KD	14 பேர்
22.	Bridge CraneOperator	60 KD	4 பேர்
23.	Truck Driver	60 KD	10 பேர்

Food Allowance 20 KD

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்:

அ. தவச்செல்வம்

[ஆசிரியர்] B. Sc. [Hons]
நேல்லியான் வீதி,
சுழிபுரம்.
[C / 1497]

பௌதிகவியல் 89

PAPER CLASS

ஆரம்பமாகிவிட்டது
ON Sat & Sun
AT 3.00 p m

N. பத்மநாதன் B. Sc (Hons)
நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட்,
திருநெல்வேலி.
(9373)

21 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

சங்கரப்பிள்ளை கனகநாயகம்

(ஓய்வு பெற்ற உதவி அதிபர் யாழ். இந்துக் கல்லூரி)

தோற்றம்: 22-06-1918
மறைவு: 01-02-1989

அன்புக்கும், பண்புக்கும், அறிவுக்கும் பிறப்பிடமாய் அன்புடன் இல்லறம் நடாத்தி இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும் இவ்வேளை அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகைகளால் உதவிய அனைவருக்கும் எங்கள் உள்ளம் கவிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
கொல்லங்கலட்டி, பேரப்பிள்ளைகள்,
தெல்லிப்பழை. (9374)

ஓராண்டு நினைவஞ்சலி

ஏரம்பு தியாகராஜா

(சுமதி கோல்ட் கவுஸ் உரிமையாளர்)

மலர்வு:- 12-01-1932 உதிர்வு:- 29-02-1988

எமது குடும்ப ஒளிவிளக்கே! எங்கே நீங்கள் மறைந்து விட்டீர்கள்! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஓராண்டு காலம் சென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு எந்நாளும் பிரியாது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

கலையரசி
மீசாலைவடக்கு,
கொடிகாமம். (9525)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரோஸ், ஈ. பி. ஆர். எல். எவ் யாழ் மாவட்டத்தில் வெற்றி!

யாழ்ப்பாணம், பெப் 22
அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட ஈ. பி. ஆர். எல். எவ் வேட்பாளர்கள் மூவரும் மட்டுமே வெற்றி பெற்றனர்.

ஈரோஸின் சுயேச்சைக் குழுவும் யாழ் மாவட்டத்தில் பெரு வெற்றியீட்டியது-

ஈரோஸின் அரசியல் பிரிவான ஈழவர் ஜன நாயக முன்னணி இத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டது. இக்குழுவைச் சேர்ந்த எட்டுப் பேர் யாழ் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பட்டியலில் போட்டியிட்டவர்களில் ஈ. பி. ஆர். எல். எவ் வேட்பாளர்கள் மூவரும் மட்டுமே வெற்றி பெற்றனர்.

திரு. க. நவரத்தினம், திரு.க. பிரேமச்சந்திரன் திரு க. யோகசங்கரி ஆகியோரே அம்மூவருமாவர்.

ஈரோஸின் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்ட திரு. இ. இரத்தினசபாபதி, திரு. எஸ். பரராஜசிங்கம், திரு. சி. சிவமகராசா, திரு. ஏ. பி. செல்லையா, திரு. ரி. லோகநாதபிள்ளை, திரு. எஸ். எட்வேட், திரு. கே. செல்வநாயகம், திரு. ஜே. ஜி. ராஜேந்திரம் ஆகிய எட்டுப் பேரும் வெற்றியீட்டினர்.

இதே சமயம் தமிழ் மாவட்டங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டியலில் போட்டியிடுவதற்கு ஈ. பி. ஆர். எல். எவ் நிறுத்திய பதினொரு வேட்பாளர்களில் எட்டுப் பேர் வெற்றி பெற்றனர். (உ)

தோல்வியடைந்த அமைச்சர்கள்!

கொழும்பு, பெப், 22
தேர்தலில் போட்டியிட்ட நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் திரு. ஈ. எல். சேனநாயக்கா, பிரதி சபாநாயகர் திரு நோர்மன் வைத்தியரத்ன குழுக்களின் பிரதித் தலைவர் திரு எட்மன் சமரவிக்கிரம ஆகியோர் பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்தனர்.

போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுள் 31பேர் தோல்வி அடைந்தனர். இவர்களுள் 4 அமைச்சர்களும் 8 பிரதி அமைச்சர்களும் 4மாவட்ட அமைச்சர்களும் அடங்குவர்.

முன்னாள் வைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு.டெல்சில் பெரிஞன்டோ, சமூக சேவைகள் அமைச்சர் திரு ஜே.எல். சிரிசேன, பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரை, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யூ தேவநாயகம், பௌத்த விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் டபிள்யூ எம். ஜி. ரி. பண்டா ஆகியோர் இம்முறை தோல்வி அடைந்தார்கள்.

முன்னாள் அமைச்சர் திரு. செ. இராசதுரை 1956 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார். முதற்தடவையாகவே அவர் இம்முறை தோல்வி அடைந்திருக்கிறார்.

உள்நாட்டு பாதுகாப்பு பிரதி அமைச்சர் திரு அனுரா பெண்டியன் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் திரு. அலவத்துவல, பிரதி ராஜாங்க அமைச்சர் திரு சந்திரா கருணாரத்ன-

பிரதேச அபிவிருத்தி பிரதி அமைச்சர் திரு ஸன்சன்ட்டயஸ், தபால் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் ஜனாப் அப்துல் மஜீத் ஆகியோரும்-

உள் நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் திரு வசந்த உதயரத்ன விவசாய அபிவிருத்தி பிரதி அமைச்சர் திரு. ஏ. கே. வணிசுரத்ன மறுவாழ்வு மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் திரு. காமினி ராஜபக்ஷ ஆகியோரும் தோல்வி அடைந்த பிரதி அமைச்சர்களாவர்

திருமதி ரங்கநாயகி பத்மநாதன், திரு ஏ. டி. பி ஏக்நாயக்க, திரு ஆர். எம். அப்புஹாமி, திரு.புஞ்சிபண்டார ஆகியோர் தோல்வி அடைந்த நான்கு மாவட்ட அமைச்சர்களாவர்.

3 ஜே.வி.பியினர் கொலை!

கொழும்பு, பெப். 22
நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின் பின்னர் கடந்த சனிக்கிழமை மாத்தறையிலும் அனுராதபுரத்திலும் ஜே. வி. பியினர் எனச் சந்தேகிக்கப்படும் மூவர் இனந் தெரியாதோரால் கொல்லப்பட்டனர்.

'கறுப்புப்பூனை' என்ற இயக்கமே இக்கொலைகளைச் செய்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது. (உ-எ)

தேர்தல் முடிவுகள்

கொழும்பு, பெப் 22
கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, புதிய நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை விவரம்- மாவட்ட ரீதியில் வருமாறு:-

மாத்தளை
ஐ. தே. கட்சி — 4
சு. கட்சி — 1

நுவரெலியா
ஐ. தே. கட்சி — 4
சு. கட்சி — 2

புத்தளம்
ஐ. தே. கட்சி — 4
சு. கட்சி — 2

மாத்தறை
ஐ தே. கட்சி — 6
சு. கட்சி — 3

இரத்தினபுரி
ஐ. தே. கட்சி — 6
சு. கட்சி — 3
ஐ. சோ. மு. — 1

மட்டக்களப்பு
த. வி. கூ. — 3
சுயே. — 1
மு. காங்கிரஸ் — 1

கண்டி
ஐ. தே. கட்சி — 8
சு. கட்சி — 4

பதுளை
ஐ. தே. கட்சி — 5
சு. கட்சி — 3

அம்பாந்தோட்டை
ஐ. தே. கட்சி — 5
சு. கட்சி — 2

அனுராதபுரம்
ஐ. தே கட்சி — 5
சு. கட்சி — 3

கேகாலை
ஐ. தே. கட்சி — 6
சு. கட்சி — 2
ஐ. சோ. மு — 1

வன்னி
த. வி. கூ. — 2
சுயே. — 1
ஐ. தே. சட்சி — 1
மு. காங்கிரஸ் — 1

யாழ்ப்பாணம்
சுயே. — 8
த. வி. கூ. — 3

மொனறாகலை
ஐ. தே. கட்சி — 3
சு. கட்சி — 2

குருணாகல
ஐ. தே. கட்சி — 10
சு. கட்சி — 5

கொழும்பு
ஐ. தே. கட்சி — 12
சு. கட்சி — 6
ம. ஐ. மு. — 2

களுத்துறை
ஐ. தே. கட்சி — 6
சு. கட்சி — 5

கம்பஹா
ஐ. தே. கட்சி — 10
சு. கட்சி — 7

திருகோணமலை
சுயே. — 2
சு. கட்சி — 1
ஐ. தே. கட்சி — 1

திகாமடுல்ல
ஐ. தே. கட்சி — 3
மு. காங்கிரஸ் — 1
த. வி. கூ. — 1
சு. கட்சி — 1

காலி
ஐ. தே. கட்சி — 6
சு. கட்சி — 5

பொலன்னறுவை
ஐ. தே. கட்சி — 3
சு. கட்சி — 1 (உ-எ)

தகர்ப்பு!

வல்வெட்டித்துறை,
பெப். 22
பருத்தித்துறை ஸ்ரீ லங்கா அரச கூட்டுத் தாபன மொத்த விற்பனை நிலையம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. அங்கிருந்த பொருட்களும் குறையாடப்பட்டன.

இந்தச்சம்பவம்கடந்த வியாழக்கிழமை காலை 10-30 மணிக்கு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-160)

பொலிகண்டியில் 4 பேர் பலி! 2 பேர் காயம்!!

வல்வெட்டித்துறை,
பெப் 22
கடந்த 12 ஆம் திகதி மாலை 5-30 மணியளவில் பொலிகண்டி ஆலடி என்றஇடத்தில் நிகழ்ந்த லோஞ்சர்த் தாக்குதல் ஒன்றில் நான்கு பேர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர்.

ஒரு வீட்டை நோக்கியே இத் தாக்குதல் நடத்தப் பட்டதாகவும்- இதனால் அந்த வீட்டில் இருந்த ஒரு வயோதிபமாது, அவரின் இளம் மகள், பேரக் குழந்தை ஆகியோரும், அயல் வீட்டுப் பெண் ஒருவரும் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

செ. பூரணம் (வயது 55 தாய்), எஸ். கலா (வயது 23 மகள்), எஸ். ரஜீவ்கரன் (ஒன்றரை வயது பேரன்) ஆகியோரே உயிரிழந்த - ஒரே குடும்பத்தைச் சேர்ந்த - உறுப்பினர்களாவர்.

எஸ் பிரேமாவதி (வயது 26) செல்வி எஸ். செல்வரட்ணம் (வயது 19) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். உ-160)

இ. தொ. காவுக்கு பெரும் தோல்வி!

கொழும்பு. பெப் 22
ஐ. தே. கட்சி பட்டியலின் கீழ் போட்டியிட்ட இ தொ கா வேட்பாளர்கள் எட்டு பேரில் இ தொ. கா பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி மாத்திரமே கொழும்பில் வெற்றி பெற்றுள்ளார்.

இ. தொ. கா நிதிச் செயலாளர் திரு: வி. அன்னாமலையும், திரு. எம். சிவலிங்கமும் நுவரெலியாவில் போட்டியிட்டு தோல்வி அடைந்தனர்.

கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட இ. தொ. கா உதவிப் பொதுச் செயலாளர் திரு. எஸ் இராஜு, இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்ட திரு. எஸ். வி. ராமையா மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட திரு. எஸ். இராஜரத்தினம், கேகாலை மாவட்டத்தில் போட்டியிட்ட திரு. பி. அந்தோனிமுத்து பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட திரு. டி. ஆர் ஜெயராஜ் ஆகியோர் தோல்வியுற்றனர். (உ)

புதிய நாடாளுமன்றத்தில் 28 தமிழர், 18 முஸ்லிம்கள்!

கொழும்பு, பெப் 22
இந்த முறை பொதுத் தேர்தலில் 28 தமிழ் எம்பிக்களும் 18 முஸ்லிம் எம்பிக்களும் தெரிவாகியிருக்கின்றனர். 191 தமிழர்களும் 224 முஸ்லிம்களும் தேர்தலில் போட்டியிட்டனர்.

வடக்கு-கிழக்கு மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஒரே ஒரு தமிழ் எம்பியே தெரிவாகியிருக்கிறார். அவர் கொழும்பு மாவட்டத்தில் ஐ. தே. க சார்பில் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எம் எஸ் செல்லச்சாமி ஆவார்-

ஸ்ரீ. ல. சு கட்சியின் கீழும் ஐ. சோ. மு கீழும் போட்டியிட்ட தமிழ் முஸ்லிம் வேட்பாளர்கள் எவரும் வெற்றி பெறவில்லை

இதேவேளை தமிழ் கட்சிகள் மற்றும் இயக்கங்களின் கீழ் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்களிலும் ஒருவரேனும் வெற்றிபெற வில்லை.

முஸ்லிம் காங்கிரஸின் கீழ் போட்டியிட்ட தமிழ் சிங்கள வேட்பாளர்களும் வெற்றிபெற வில்லை.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் போட்டியிட்ட ஐ. தே. க வேட்பாளர்களில் இருவர் மட்டுமே வெற்றிபெற்றனர்.

தெரிவாகிய முஸ்லிம் எம்பிக்களில் 3 பேர் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள். ஏனைய 9 பேரும் ஐ தே கவை சேர்ந்தவர்களாவர்.

ஐ. தே. க 35 தமிழ் வேட்பாளர்களை நிறுத்தியது. அவர்களில் திரு. செல்லச்சாமி மற்றும் திருமதி புலேந்திரன் ஆகிய இருவர் மட்டுமே வெற்றி பெற்றனர்.

ஐ. தே. க போட்டியில் நிறுத்திய 31 முஸ்லிம் வேட்பாளர்களில் 9 பேர் வெற்றி பெற்றனர்.

ஸ்ரீ.ல.சு க 9 தமிழர்களையும் 27 முஸ்லிம்களையும் போட்டியில் நிறுத்தியது. அவர்களில் ஒருவரும் தெரிவாகவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் 120 முஸ்லிம் வேட்பாளர்களையும் 20 தமிழ் வேட்பாளர்களையும் போட்டியில் நிறுத்தியபோதிலும் மூன்று முஸ்லிம் வேட்பாளர்கள் மட்டுமே வெற்றிபெற்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியலில் மூலம் 4 முஸ்லிம்களும் 2 தமிழர்களும்-

சுதந்திரக் கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் ஒரு தமிழரும் ஒரு முஸ்லிமும்-

தமிழர் விடுதலைக் கூட்டணி, யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுயேச்சை ஆகியவற்றின் தேசியபட்டியல் மூலம் தலா ஒருவரும்-

முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் மூலம் ஒருவரும் எம் பிக்களாக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது

இவற்றையும் சேர்த்து நாடாளுமன்றத்தில் இம்முறை மொத்தம் 28 தமிழ் எம்பிக்களும் 18 முஸ்லிம் எம்பிக்களும் இடம்பெறுகின்றனர்.

வடக்கிலிருந்து முதல் பெண் எம். பி.!

கொழும்பு, பெப் 22
வடபகுதியிலிருந்து முதலாவது பெண்மணி இந்தப் பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அவர் திருமதி இராசமனோகரி புலேந்திரன். இவர் வன்னி மாவட்டத்தில் ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார்.

இவர் வவுனியாவில் ஐ. தே. கட்சித் தலைவர்களில் ஒருவராக இருந்த திரு. கே. ரி. புலேந்திரனின் மனைவி ஆவார். திரு. புலேந்திரன் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதை தடுத்து திருமதி இராசமனோகரி அரசியலுக்கு வந்தார்.

திருமதி இராசமனோகரி முன்னாள் யாழ்மேயர் காலஞ்சென்ற திரு. ரி. எஸ். துரைராஜாவின் மகள் ஆவார். (உ)

சுட்டுக் கொலை

வல்வெட்டித்துறை,
பெப், 22
புலோலி கிராமசபையின் முன்னாள் தலைவர் எஸ். கணபதிப்பிள்ளை (வயது 77) சுட்டுக் கொல்லப்பட்டார்.

பொதுத் தேர்தல் அன்று நண்பகல் 1.30 மணியளவில் புலோலி அரசாங்க அதிபர் பணிமனைக்குச் சற்றுத் தள்ளி வீதியில் சென்று கொண்டிருந்த போது இவர் சுட்டுக் கொல்லப் பட்டார். (உ-160)

பஸ் தீக்கிரை!

வல்வெட்டித்துறை,
பெப். 22
வீதியில் நின்ற வ. பி. போ. ச பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்றது.

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த இந்தபஸ், வீதியின் குறுக்கே உள்ள பள்ளத்தில்இறங்கியதை அடுத்து முன்னேறமுடியாது தரித்துநின்றது.

அப்பகுதியில்கேட்ட குண்டுவெடிப்புச் சத்தங்களை அடுத்து இந்த பஸ் தீக்கிரையாக்கப்பட்டது. (உ-160)

வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏதும் இராது

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை. புதிய வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன இப்படித் தெரிவித்தார்.

திரு. விஜயரத்ன புதிய வெளியுறவு அமைச்சராக அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது தெரிந்ததே.

இதனிடையில் வெளியுறவு அமைச்சின் புதிய செயலாளராக திரு. பேர்னாட் திலகரத்ன நியமிக்கப்படவுள்ளார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இவர் தற்போது புதுடில்லியில் இலங்கைத் தூதராகப் பணியாற்றி வருகிறார். (உ-எ)

FORTUNA ENTERPRISES

[Labour Licence No 79]

Immediate Vacancies in Kuwait

உடனடி வேலை வாய்ப்புக்கள்

(1) Airport and Hospital Cleaners-250
விமானநிலைய, ஆஸ்பத்திரி கத்திரிப்பாளர்
சம்பளம்: 30 KD
(மேலதிகநேரவேலை திடப்படுத்தப்பட்டுள்ளது)
அத்துடன் இருப்பிட வசதி
7 போட்டோக்களுடனும்
பாஸ்போர்ட்டுடனும் விண்ணப்பித்தால்
30-03-89க்கு முன் பிரயாணமாகலாம்.

(2) Heavy Vehicle Drivers -50
கனரக வாகன சாரதிகள்
சம்பளம்: 60 KD

(3) Light Vehicle Drivers 50
சாதாரண வாகன சாரதிகள்
சம்பளம்: 45 KD
நாடவேண்டிய முகவரி:
யாழ்ப்பாணப் பிரதிநிதி

இ. விஸ்வேஸ்வராயன்
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

[C-1436]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகள்

கொழும்பு, பெப் 22

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் மொத்தமாகப் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை வருமாறு:-

ஐ. தே. க - 28,37,961
ஸ்ரீ. ல. சு. க - 17,80,599
ஸ்ரீ ல மு. கா - 2,02,014
த. வி. கூ. - 1,88,593
ஐ. சோ. மு - 1,60,271
ம. ஐ மு - 95,793
எ. ல. ஐ. க - 67,722

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்ட ஈரோஸின் சுயேச்சைக்குழு மொத்தமாக 2 லட்சத்து 29 ஆயிரத்து 877 வாக்குகளைப் பெற்றது. (உ)

உண்ணாவிரதம்

போதைவஸ்து பாவனை, விற்பனைக்கு எதிராக குருநகர் சனமூக நிலையமுன்றலில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் அனுட்டிக்கப்பட்டது.

குருநகர், போதைவஸ்து ஒழிப்புச் சங்கம் இதனை ஒழுங்கு செய்திருந்தது. (உ-51)

141 தொகுதிகளில் ஐ.தே.க.முன்னணி

கொழும்பு, பெப். 22

பழைய முறைப்படி நாட்டின் 160 தொகுதிகளில் தொகுதி அடிப்படையில் இந்த முறை பொதுத்தேர்தல் நடைபெற்றிருந்தால் ஐ.தே.க. 141 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கும்

ஏனைய கட்சிகள் 19 தொகுதிகளில் வெற்றி பெற்று இருக்கும்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ தே க. 140 தொகுதிகளிலேயே வெற்றி பெற்றது.

பழைய முறைப்படி தேர்தல் நடைபெற்று இருந்தால் இந்த முறையும் தமிழ் சுயேச்சைக் குழுக்களும், தமிழ் கட்சிகளுமே எதிர் கட்சித் தலைமைப் பீடத்திற்கு தகுதிபெற்றிருக்கும்.

தமிழ் சுயேச்சைக் குழுக்கள் சாவகச்சேரி, மானிப்பாய், வட்டுக்கோட்டை, உடுப்பிட்டி, பருத்தித்துறை, கோப்பாய், மட்டக்களப்பு, காங்கேசன்துறை, நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய தொகுதிகளில் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி பட்டிருப்பு மற்றும் கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

பாணந்துறை, மொனருகலை, அத்தனகலை, களுத்துறை, தலைநகரை ஆகிய தொகுதிகளில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், சமூகநீதி மற்றும் கல்குடா தொகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸும் ஏனைய கட்சிகளைத் தோற்கடித்துள்ளன.

1977 ஆம் ஆண்டு ஐ தே. க. 140 தொகுதிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி 17 தொகுதிகளிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 8 தொகுதிகளிலும் சுயேச்சை ஒருவர் ஒரு தொகுதியிலும் இ. தொ கா. ஒ தொகுதியிலும் வெற்றி பெற்றன. (உ)

பெண் கொலை!

வல்வெட்டித்துறை, பெப் 22

கைக்குழந்தை பருதியைச் சேர்ந்த துரைமணி நல்லதங்கச்சி (வயது 56) என்ற பெண்மணி கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்

மாதனை கண்ணகை அம்மன் கோவிலடியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. (உ-160)

அநுராவே மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர்?

கொழும்பு, பெப். 22

புதிய நாடாளுமன்றத்தி எதிர்கட்சித் தலைவராக திரு. அனுரா பண்டாரநாயக்காவே மீண்டும் வரக்கூடும் என்று சுதந்திரக்கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்திலும் திரு. அனுரா பண்டாரநாயக்காவே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.

நாடாளுமன்றத்திற்கு தெரிவான புதிய எதிர்க் கட்சிகளின் தலைவர்களுடன், புதிய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவுபற்றி திரு. அனுரா பண்டாரநாயக்கா பேச்சுக்கள் நடத்தி வருகிறார் என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

49 துணையமைச்சர்கள்

கொழும்பு, பெப் 22

ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸாவினால் கடந்த சனிக்கிழமையன்று துணை அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் 49 பேரின் விவரங்களும் வருமாறு:-

1. டாக்டர் விமல் விக்ரமசிங்க — கொள்கை, திட்டமிடல், அமுலாக்கல்.
2. ரஞ்சன் விஜயரத்ன — பாதுகாப்பு.
3 லால் கமகே — பௌத்த சாசனம்
4. ஜோன் அமரதுங்க — வெளிநாட்டலுவல்கள்.
5. அசோகா வடிவக மங்காவ — காணி.
6. எச் ஜி பி. நெல்சன் — நீர்ப்பாசனம்.
7 காமினி அத்துக்கோறளை — மகாவலி
8 ஜே பி. விஜயரத்ன பண்டா — விவசாயம்.
9. டி. எம் பிரேமரத்ன — உணவு.
10. மகேந்திர விஜயரத்ன — கால்நடை வளர்ப்பு, பண்ணைத் தொழில்.
11. ஆர். சமரவீர — கூட்டுறவு
12. பி. எம். எவ். கலபதி — கடற்றொழிலும், நீரியல் வளங்களும்.
13. கே. எம். டி. சந்திரா பண்டார— பொதுநிர்வாகம்.
14. ரூபா கருணாதிலக — மாகாணசபைகள்
15. பியசீலி ரத்னாயக்கா — உள்நாட்டலுவல்கள்.
16 ஹேரால்ட் ஹெரத் — நிதி.
17. கே. வின்சன்ட் பெரேரா — புனர்வாழ்வு, புனரமைப்பு.
18. பி. எச். பி சமரநாயக்கா — வர்த்தகம்.
19 இந்திரதாஸ ஹெட்டியாராச்சி — கப்பற்றுறை.
20: எம். எல். எம். அபுசாலி — பெருந்தோட்டத்துறை
21. சமரவீர வீரவன்னி — பெருந்தோட்டங்கள்.
22. சரத்சந்திர ராஜகருணா — தெங்குத் தொழில்.
23, வீரசிங்க மல்லிமாராச்சி — கைத்தொழில்.
24 ஆரியரத்தின ஜெயதிலக — கனிப்பொருள்களும், கனிப்பொருள் கைத்தொழில்களும்.
25. மோர்வின்டி கூரே- மின்சக்தி, எரிபொருள்.
26. எம் எஸ் செல்லச்சாமி — போக்குவரத்து.
27. கே.ஏ.குலரத்தின — நெடுஞ்சாலைகள்.
28 சுனித்ரா ரணசிங்க — கல்வி.
29. ஆர். எம். பி. டீ கவிரத்ன — கலாசாரம்,
30. ஏ. ஜே. ரணசிங்க — தகவல்.
31 பி. தேவராஜ் — இந்துமத கலாசார விவகாரம்
32 ஜாபிர் காதர் — முஸ்லிம் மத விவகாரம்
33 டாக்டர் பி. எம். பி. சிரில்— சுகாதாரம்.
34. டபிள்யு.எம்.எஸ். டி வன்னிநாயக்கா — சுதேச வைத்தியம்.
35 எஸ் எம். ஏ. லொக்கு பண்டா — மகளிர் விவகாரம்.
36. ரோஹான் அபயகுணசேகரா — உயர் கல்வி.
37. போல் பெரேரா— விஞ்ஞானமும், தொழில் நுட்பமும்.
38. லக்ஷ்மன் செனவிரத்ன — தொழில்.
39. சமந்தா கருணாரத்ன — சமூகநலத் துறை
40. டிரோன் பெர்னாண்டோ — நீதி.
41. உபாலி தஸநாயக்கா — நாடாளுமன்ற அலுவல்கள்.
42 ஏ. எம். இம்தியாஸ் — வீடமைப்பு.
43. சந்திரா ரணதுங்கா — நிர்மாணத் துறை.
44 தயானந்த விக்ரமசிங்கா — புடவைத் தொழில்.
45. ஆர். பி. விஜயசிரி — கிராமியத் தொழில் துறை அபிவிருத்தி.
46 ஹரேந்திரா கொரியா — தபால், தொலைத் தொடர்பு
47. சந்திரா கன்கந்த — இளைஞர் விவகாரம்.
48. டி. எம். ஆரியதாஸ — விளையாட்டுத் துறை.
49. காமினி லொக்குகே—சுற்றுலாத்துறை. (உ-எ)

வீதி வேலைகள்

மாங்குளம், பெப். 22

ஒலுமடு, தச்சடம்பன் வீதி [illegible] வேலை [illegible] ஆரம்பிக்கப்பட்டுள்ளன (க - 94)

வீட்டுத் தோட்டப் போட்டி

மானிப்பாய், பெப்.22

மானிப்பாய் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பிரிவில் நடைபெற்ற வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைப் போட்டியில் மானிப்பாயைச்சேர்ந்த செல்வி தரிசி பகுபதிப்பிள்ளை முதலிடத்தை பெற்றுள்ளார்.

இரண்டாம் இடத்தை திரு. சி. முதலியாரும் மூன்றாம் இடத்தை திரு. சி. சிவேந்திராவும் பெற்றனர்.

இவர்களுக்கான விவசாய உபகரணப் பொருள்கள் மானிப்பாய் விவசாயிகள் சங்கக் கூட்டத்தின் போது வழங்கப்படும் என மானிப்பாய் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. எவ். சிவகுமாரன் தெரிவித்தார். (ச - 90)

பதநீரிலிருந்து குளிர்பானம்

காங்கேசன்துறை, பெப்22

பதநீரிலிருந்து 'நீரா' என்னும் குளிர்பானம் தயாரிக்க 15 ஆயிரம் ரூபாவை தெல்லிப்பழை தெற்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் ஒதுக்கியுள்ளது.

சேந்தாங்குளத்தில் ஏற்கனவே இயங்கிய மேற்படி சங்கத்தின் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இயங்க முடியாத நிலையில் உள்ளது.

இத் தொழிற்சாலையில் பதநீரிலிருந்து 'நீரா' என்னும் பெயரில் குளிர்பானத்தை தயாரிக்க தற்போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (க-68)

போஷாக்கு உணவுத்திட்டம்

கரவெட்டி, பெப் 22

போருட், செஞ்சிலுவைச்சங்கம், சர்வோதயம், குழந்தைகள் பாதுகாப்பு நிறுவனம் ஆகிய நான்கும் இணைந்து கரவெட்டி கிழக்கில் கர்ப்பிணிப் பெண்கள், தாய்மார்கள், குழந்தைகளுக்கான போஷாக்கு உணவு வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்து செயற்படுத்திவருகின்றன. (இ-70)

புதிய அமைச்சர்களுக்கு— ஜனாதிபதி அறிவுரை

கொழும்பு, பெப் 22

புதிதாக பதவியேற்றிருக்கும் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸ அறிவுரை வழங்கியிருக்கிறார்

புதிய அமைச்சர்கள் அண்மையில் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி பிரேமதாஸ முன்னிலையில் பதவி ஏற்றனர்.

அதன் பின்னர் அவர்கள் மத்தியில் ஜனாதிபதி பிரேமதாஸ பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது;

பீதியின் பிடியில் இருந்து பாதுகாப்பிற்கும்-

வறுமையில் இருந்து வளமான வாழ்வுக்கும்-

நாட்டு மக்களை நம்பிச் செல்ல எனக்கு உதவவிருக்கும் குழுவே புதிய அமைச்சரவை.

அரசியல் கோபதாபங்களை வளர்க்கும் வகையில் அல்லது கருத்து வேற்றுமைகளைத் தூண்டும் வகையில் அமைச்சர்கள் ஈடுபடக் கூடாது

அரசியல் யாப்பு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அதிகாரத்தை பிரயோகிக்கும் பொறுப்பு என்னிடமே உண்டு.

இந்த விடயத்தில் நானே மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவன்.

அரசியல் யாப்பு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளே அமைச்சர்கள்.

நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகிப்பதில் ஜனாதிபதிக்கு உதவும் பொருட்டே அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் நலன்களை முன்னிட்டுப் பொருத்தமான முறையில் அமைச்சர்களைப் பதவி மாற்றம் செய்யும் உரிமை எனக்கு உண்டு.

ஓர் அமைச்சரை பதவி மாற்றம் செய்யும் போது அல்லது ஓர் அமைச்சரை முற்றாகவே பதவி நீக்கஞ் செய்யும் போது அதற்குரிய காரணங்களை நான் தெரிவிக்க வேண்டியதில்லை.

நாட்டின் நலனும் மக்களின் நலனுமே எனக்கு வழிகாட்டி

தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கோ அல்லது சாதக சூழ்நிலைகளுக்கோ நான் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை.

வீண் விரயத்தையும் ஊழலையும் தடுப்பதே முக்கியமான குறிக்கோள் என்பதை ஒவ்வொரு அமைச்சரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

நம் நாடு வளர்ச்சியடைந்து வரும் நாடு மக்கள் மத்தியில் இருந்து வறுமையைப் போக்குவதே பிரதான இலட்சியமாக இருக்க வேண்டும்.

— இப்படி ஜனாதிபதி சொன்னார். (உ-எ)

433 பேர் கொலை!

கொழும்பு, பெப் 22

இம்மாதம் 11 ஆம் திகதி தல் 20 ஆம் திகதி வரை தென்பகுதியில் வன்செயல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 433 என்று அறிவிக்கப்பட்டுள்ளது

பொதுத்தேர்தல் தினத்தன்று மட்டும் 70 பேர் கொல்லப்பட்டனர்.

இது பற்றிய விவரம் திகதி வாரியாக வருமாறு:

பெப் 11, 12—75 பேர்
பெப் 12, 13—114பேர்
பெப் 13, 14—58 பேர்
பெப் 14, 15—70 பேர்
பெப் 15, 16—55 பேர்
பெப் 16, 17—61 பேர்

(உ-எ)

நன்றி நவிலல்

எங்களுடைய குடும்பத் தலைவர் பேராசிரியர், கலாநிதி க. வித்தியானந்தன் அவர்களுடைய இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும். அஞ்சலி உரைகள் நிகழ்த்திய பெரியோர்களுக்கும். அஞ்சலி வெளியீடுகள் செய்த நிறுவனங்கள், அன்பர்கள் யாவருக்கும் எங்களுடைய அன்பு கலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பிள்ளைகள்
சகோதர சகோதரிகள்.

'தமிழரசு'
தெல்லிப்பழை
20-2-1989

(C/1196)

ஈராண்டு நினைவஞ்சலி

அந்தோனிப்பிள்ளை பர்ணாந்து
[சேவியர்]

பூவுலகில் 13 - 7 - 1933
வானுலகில் 13 - 2 - 1987

மறுப்புக்களால் கூட
அனுமதிக்கப்படாத உந்தன் மறைவு
இருவிழிகள் இழந்ததுபோல்
இருளிலே தேடுகின்றோம்
அசையாது விறைத்துப் போன
மரங்களின் இலை ஒன்று
மெல்லென அசைவது போல்
நிகழ்ந்துவிட்டதே!
எங்கோ ஒரு மூலையில் முளைத்த
விதை போல் எழுப்பிய உன்னை
எடுத்து இந்த இறப்புக்குள் மறைத்து
வைத்ததை என்னவென்று அனுமதிப்பது?
ஆவி பிரிந்து ஆண்டிரண்டு சென்றாலும்
எம் ஆயுள் உள்ளவரை மறவோம்!

445, பிக்ரேட், யாழ்ப்பாணம்.
தாய், மனைவி, மக்கள், குருநகர், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.
(C/1498)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

★ COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம். 2 மாதம் ஆரம்பம்: 3-3-89
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)
கட்டணம்: ரூபா 950/- (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

O / L படித்த இருபாலாரும் சேரலாம். குளிர் ஊட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி (I. B. M COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்

விண்ணப்ப முடிவு நாள்: 2 - 3 - 89.

UNIKCO
COMPUTER CENTRE
No. 5, மின்சாரநிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபாற்கந்தோர், அருகாமை)
(C 1658)

+
J.M. J.

எஸ்.பி. அன்ரன் வழங்கும் வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

★ தாய்வான் நாட்டிற்கு
வேலை வாய்ப்பு
2 வருட ஒப்பந்தம்
சம்பளம் 12000/-
15 நாட்களில் பயணம் உடன் செய்து தரப்படும்.

★ பஹ்ரைன் நாட்டில்
வீட்டுப் பணிப் பெண்கள் தேவை உடன் தொடர்பு கொள்ளவும்.

★ லெபனான்
வேலையாட்கள் தேவை
சம்பளம் - 3500/-
உடன் செய்து தரப்படும்
உடனே எம்முடன் தொடர்பு கொள்ளவும்

S. P. ANTON
648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

★ குறிப்பு - யோர்தான் நாட்டிற்கு பாஸ்போட் தந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

C / 1494)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:
செறுவார்க்குச் சேணிகவர் இன்பம்
அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.

பொருள்:
(பகைமையை விலக்கவோ அல்லது வெல்லவோ வேண்டிய) நல்லறிவும் இல்லாமல் (பகைவரை எதிர்க்கக்கூடிய வீரியமும் இல்லாது) அச்சமும் உள்ளவர்கள் கிடைத்தால் அவர்களுடன் போர் புரிய எண்ணுகிறவர்களுக்கு அளவற்ற இன்பம்.

உதயன்
இல. 293/3 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22075
22. 2. 1989 த. பெ. இல23

மக்கள் நலன்

மனித உரிமைகள் மீறப்படும்போது, அதனைக் கண்டித்துக் குரல் எழுப்ப ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். தங்களுக்குத் தாக்கம் ஏற்படவில்லை என்பதால் மௌனமாக இருந்துவிடல் ஆகாது. ஒரு சமயத்தில் தம்மீது மனித உரிமை மீறல் திணிக்கப்படும்வரை காத்திருத்தல் கூடாது.

இந்த விடயத்தில் சமூகநல ஸ்தாபனங்கள் மட்டுந்தான், அல்லது பாதிக்கப்பட்டவர்களே தனித்து நின்று எதிர்ப்புக்குரல் எழுப்ப வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பதும் உகந்தது அல்ல.

மனித உரிமைமீறல் ஆபத்து தத்தமது குழுத்துக்கு நேரே வரும்வரை பார்த்திருப்பது சமூக வாழ்க்கைக்கும், மேம்பாட்டுக்கும், மனித சுதந்திரத்துக்கும் ஆரோக்கியமானதல்ல.

இந்த விடயத்தில் தொழில் ரீதியாக இயங்கும் சங்கங்களும், மன்றங்களும்கூட உரிய நேரத்தில், உகந்த விதத்தில் மனித உரிமை மீறலுக்கு எதிராகக் குரல் கொடுத்துப் போராட வேண்டும். குறிப்பாக டாக்டர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர்கள் போன்ற தொழில் சார்பினர் (Professionals) தம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளைத் தெரியாதவர்களாக, கண்மூடி மௌனிகளாக இருந்துவிடக் கூடாது.

யாழ்ப்பாணத்தில் இவ்வார ஆரம்பத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில், இப்பகுதியில் உயர்பதவி வகித்து வருபவரும் தொழில் சார்பினருமான ஒருவர் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

எந்த விவகாரத்திலும், விடயத்திலும், பாதிக்கப்படுபவர்கள் மட்டுமே எதிர்ப்புக் குரல் அல்லது கண்டனக் குரல் எழுப்ப வேண்டும் என்ற நிலை இருக்கக்கூடாது. மற்றவனுக்கு ஏற்படும் பாதிப்பை அல்லது தாக்கத்தைப் பற்றி அசிரத்தையாய் இருக்கும் ஒவ்வொருவரும் தமக்கு உள்ள சமூகக் கடமையில் இருந்து தவறியவர்கள் ஆவர்.

சூழ உள்ள சமூகத்தில் நடக்கும் உரிமை மீறல்கள் அல்லது அனர்த்தங்கள் தன்னைப் பாதிக்காது என நினைக்கும் எவரும் உலகியலைப் புரிந்தறிய முடியாதவர்களே! உரிமை மீறல்கள், அநியாயங்கள், அடக்கு முறைகளைக் கண்டிக்காமல் அல்லது எதிர்க்காமல் விடுவதன் மூலம் அவற்றில் இருந்து தாம் தப்பிக்கொள்ளலாம் என்ற தப்புக்கணக்குப் போடுதலும் பெருந்தவறு.

எனவே கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்து எல்லோரது கவனத்தையும் ஈர்க்க வேண்டும். சமூக நல ஸ்தாபனங்களும், அரசியல் இயக்கங்களும், பாதிக்கப்பட்டவர்களும் மட்டுமே என்ற நிலைமாறி, சகல தரப்பினரும் உரிமை மீறல்களுக்கு அநியாயங்களுக்கு, அக்கிரமங்களுக்கு எதிராகக் குரல் எழுப்புவது அவசியம்.

இலங்கையைப் பொறுத்த மட்டிலும், தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்த வரையிலும் மக்கள் அமைதியாகவும், பாதுகாப்பாகவும், வழமையான வாழ்க்கையை நடத்த முடியாத நிச்சயமில்லாத தன்மை நிலவிவருவது கண்கூடு. எந்த ஒரு பிரசையும் தனக்கிருப்பு முழு மனித உரிமைகளையும் அனுபவித்து வாழும் பூரணத்துவமான நிலை நாட்டில் இன்னும் ஏற்படவில்லை. இந்த அவலம் மாறுவதற்கு மக்கள் நலன் கருதி சகல தரப்பினரும் உழைத்திடுதல் இன்றைய தேவையாகும்.

பாகிஸ்தான் யோசனை; சோவியத் நிராகரிப்பு

மாஸ்கோ, பெப். 21
பாகிஸ்தானும் ஆப்கனிஸ்தானும் அங்கம் வகிக்கும் சம்மேளனம் ஒன்றை அமைப்பது பற்றிய யோசனையை சோவியத் யூனியன் நிராகரித்து விட்டது. இந்த யோசனையை பாகிஸ்தான் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது

பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் வெளியிட்டதாகக் கூறப்படும் இந்த யோசனை அதிர்ச்சியைத் தந்தது என்று மாஸ்கோ மேலும் அறிவித்தது. (எ)

நூலிழையில் தொங்கிக்கொண்டிருந்த

பிரிட்டன்-ஈரான் ராஜதந்திர உறவு

ஒரு நூலினால் மீண்டும் அறுந்தது!

லண்டன், பெப் 21
ஈரானுடனான ராஜதந்திர உறவை பிரிட்டன் நேற்றுத் துண்டித்துக் கொண்டது.

பிரிட்டிஷ் எழுத்தாளரான சல்மான் ருஷ்தியின் மீது ஈரான் ஆத்மீகத்தலைவர் ஆயதுல்லா கொமேனி 'மரணதண்டனை' விதித்ததைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையே கடந்த சில தினங்களாக ராஜதந்திர நெருக்கடி நிலவியது. அதன் உச்சக்கட்டமாகவே பிரிட்டனின் இந்த அறிவிப்பு வெளியானது

'சாத்தானின் வசனங்கள்' என்ற நூலை எழுதிய நாவலாசிரியர் ருஷ்தி வெளியிட்டார். இஸ்லாத்தை அவமதிப்பதாக அந்த நூல் அமைந்துள்ளது என்று கூறி உலகநாடுகளில் முஸ்லிம்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். சிலநாடுகள் அந்த நூலைத்தடை செய்துவிட்டன. பிரிட்டன் அந்த நூலைத்தடை செய்யவில்லை. அதைத் தொடர்ந்து, நூலை எழுதிய ருஷ்தியிடு மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக கோமேனி அறிவித்தார்.

மரணதண்டனையை நிறைவேற்றுவதற்கு 60 லட்சம் அமெரிக்க டாலர் பரிசுப்பணம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா ஆகியன பலத்த எதிர்ப்புத் தெரிவித்தன.

இது அரசபயங்கரவாதத்தைத் தூண்டிவிடும் செயல் என அவை கண்டனம் தெரிவித்தன.

நேற்று முன்தினம் பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் நடந்த ஐரோப்பிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் இப்பிரச்சினை ஆராயப்பட்டது.

அந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜிப்ரிஹோ, ஈரானுடனான தொடர்பை துண்டிக்கும் முடிவை வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஈரானிலுள்ள தங்கள் தூதர்களை ஆலோசனைக்காக தாயகம் திரும்பும்படி அழைத்துள்ளன.

இதுவிடயத்தில் ஈரானுடன் உயர்மட்ட ராஜதந்திரத் தொடர்புகளை வைத்துக் கொள்வதில்லை என்று ஏனைய ஐரோப்பிய நாடுகள் தீர்மானித்து உள்ளன.

அதேவேளை — லண்டனில் உள்ள ஈரானியப் பிரதிநிதி வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டார்.

லண்டனில் உள்ள ஈரானிய தூதரகத்தை மூடும்படியும், தூதரும் மற்றொரு ஈரானிய ராஜதந்திரியும் பிரிட்டனில் இனியும் தங்கியிருக்க வேண்டியதில்லை என்றும் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டன், தெஹ்ரானில் உள்ள தனது தூதரகத்தை மூடிவிட்டது; அங்கு பணியாற்றிய பிரிட்டிஷ் ராஜதந்திரிகளையும் திருப்பி அழைத்துக் கொண்டது.

கடந்த சில ஆண்டுகளாக சீர்குலைந்து இருந்த பிரிட்டன் - ஈரானிய ராஜதந்திர உறவு கடந்தநவம்பரில் இருந்து தான் மீண்டும் சகஜ நிலைக்குத் திரும்பத் தொடங்கியது. (எ)

கர்பூச்சியப் பிரச்சினை; பேச்சுக்களில் முட்டுக்கட்டை

ஜகார்த்தா, பெப். 21
கம்பூச்சியப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது சம்பந்தமாக இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்று வரும் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

இப் பேச்சுக்களில் கம்பூச்சிய அரசுத் தலைவர்கள், கிளர்ச்சிக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் வியட்நாம் அரசுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இன்று பேச்சுக்களின் இறுதி நாளாக இருந்தது.

கம்பூச்சியாவிற்குள் 10 ஆண்டுகளுக்கு முன்னர் வியட்நாம் துருப்புக்கள் நுழைந்தன.

கம்பூச்சியப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதைத் தொடர்ந்து 1990 டிசம்பருக்குள் தனது படைகளை விலக்கிக் கொள்ளப் போவதாக வியட்நாம் அறிவித்திருந்தது.

அதைத் தொடர்ந்தே அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பேச்சுக்களில் கலந்து கொண்ட வியட்நாம் பிரதிநிதி, அரசியல் தீர்வு காணும் வாய்ப்பு இல்லை என்று அறிவித்தார்.

கிளர்ச்சிக் குழுக்களின் சார்பில் கலந்த இளவரசர் சிஹனூக் கருத்து வெளியிடுகையில், தீர்வு காண இன்னமும் எவ்வளவோ காலம் செல்ல வேண்டியுள்ளது என்று கூறினார்.

மே மாதம் நடைபெறவுள்ள சீன - சோவியத் தலைவர்களின் உச்சி மாநாட்டைத் தொடர்ந்து தான் அரசியல்தீர்வு காணும் வாய்ப்பில் முன்னேற்றம் காணுப்படலாம் என்று பிபிசி நேற்று அறிவித்தது.

மத்திய-மாநில உறவு பற்றி கலைஞர் கருத்து

புதுடில்லி, பெப் 21
மாநிலங்கள் மத்தியில் பிரிவினை உணர்வு வளருகிறது என்ற குற்றச்சாட்டுப் பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி விளக்கமளித்தார்.

புதுடில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் திரு. கருணாநிதி பேசினார்.

அவர் சொன்னதாவது;

மாநிலங்கள் மத்தியில் பிரிவினை உணர்வு வளருவதாக அடிக்கடி குற்றஞ்சாட்டப்படுகிறது.

மாநிலங்களில் இருந்து பிரிக்கக்கூடிய வகையில் மத்திய அரசும் தனது சிந்தனை, செயல்களை வளர்த்துக் கொள்ளக் கூடாது

இந்திய சமஷ்டியின் நிலை வண்டிச்சக்கரம் போன்றது.

அச்சாணியில் இருந்து சக்கரங்கள் கழன்று போகும்நிலை இந்தியாவில் இல்லை. ஆனால் (மாநிலங்கள்) சக்கரங்களை விட்டு (மத்திய அரசு) அச்சாணி கழன்று போகும் நிலைதான் இன்று இந்தியாவில் நிலவுகிறது

இந்த நிலையைத்தான் இந்திய மக்கள் இன்று எதிர்நோக்கியுள்ளனர்.

இப்படி திரு. கருணாநிதி தெரிவித்தார். (எ)

ஐந்து மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள்

இந்தியாவில் ஐந்து மாநிலங்களுக்குப் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்.

விவரம் வருமாறு:-

1 திருமதி சரளா கிர்வால் - மத்தியப் பிரதேசம் இவர் இதுவரை பிரதமர் அலுவலகத்தில் செயலாளராகக் கடமையாற்றி வந்தார்.

2 ஜகன்னாத் பஹாடியா பீஹார். இவர்இந்திராகாங்கிரஸ் பொதுச் செயலாளர்களில்ஒருவர்

3 திரு எஸ் ஆர் பட்நாகர்—சிக்கிம், இவர் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர்.

4 ரி வி ராஜேஸ்வர் மேற்குவங்காளம். இவர் சிக்கிம் ஆளுநராகப்பணியாற்றியவர்,

5 நூருல் ஹஸன் — ஒரிஸ்ஸா, இவர் மேற்குவங்காள ஆளுநராகப் பணியாற்றினார். (எ)

போதைவஸ்து மீட்பு!

பம்பாய், பெப் 21
இந்திய சுங்கத் திணைக்களத்தினர் பம்பாயில் 35 கிலோ ஹெரோயின் போதைவஸ்தைக் கைப்பற்றினர்.

இதன் சந்தை விலை இந்தியப் பணத்தில் 37 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-எ)

சார்ஸின் சவூதி விஜயம்

பிரிட்டிஷ் இளவரசர் சார்ஸஸ் வருகிற மாதம் 14 ஆம் திகதி சவூதி அரேபியாவிற்கும் ஐக்கிய அரபுஎமிரேற்கும் விஜயம் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார் (எ)

கேரளாவில் ஜாக்குலின்!

மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோன். எப். கென்னடியின் மனைவி ஜாக்குலின் அம்மையில் திடீரென்று கேரள மாநிலத்திற்கு விஜயஞ் செய்தார்.

கென்னடி கொலைசெய்யப்பட்ட பின்னர் ஜாக்குலின், கிரேக்கதொழில் அதிபர் அரிஸ்டோட்டில் ஒனாஸிஸ் என்பவரைத் திருமணஞ்செய்தார்.

இரகசியமாகக்கேரளா வந்த ஜாக்குலினை மக்கள் அடையாளங் கண்டு கொண்டனர்.

பத்திரிகையாளரும் அவரைச் சுற்றி வளைத்தனர். புகைப்படக்காரர்களும் அவரை விட வில்லை. படம் பிடித்துக் கொண்டனர். (உ-எ-4)

அமைச்சர்கள் விவரம்

கொழும்பு, பெப். 22
பொதுத்தேர்தல் முடிவடைந்தபின் கடந்த சனிக்கிழமை காலை 22 உறுப்பினர்களைக் கொண்ட புதிய அமைச்சரவை பதவியேற்றது

இதேவேளை சனிக்கிழமை மாலையில் மேலும் 49 துணை அமைச்சர்களை (State Ministers) ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ நியமித்தார்.

அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களாக இந்த 49துணை அமைச்சர்களும் செயற்படுவார்களென அறிவிக்கப்பட்டது.

முன்னர் பிரதிஅமைச்சர்கள் செயற்பட்டதற்குப்பதிலாகத் தற்போது துணை அமைச்சர்கள் முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஓர் அமைச்சருக்குக் கீழ் உள்ள பல அமைச்சுகளில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாகத் துணை அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்,.

கடந்த சனிக்கிழமை பதவியேற்ற புதிய அமைச்சரவை விவரம் வருமாறு:-

1. ஜனாதிபதி பிரேமதாசா - பௌத்த சாசன அமைச்சு, கொள்கை திட்டமிடல், அமுலாக்கல், பாதுகாப்பு.

2. விஜயபால மெண்டிஸ் - போக்குவரத்து நெடுஞ்சாலைகள்.

3. ஏ. எல். எஸ். சாகுல் ஹமீது - உயர்கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம்.

4. பி. தயாரத்தினகாணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி.

5. டி. பி. விஜயதுங்க - நிதி.

6. காமினி திஸநாயகா - பெருந்தோட்டத் தொழில்துறை,

7. வின்சென்ட் பெரேரா - நீதி, நாடாளுமன்ற அலுவல்கள்.

8. லலித் அத்துலத்முதலி - விவசாய, உணவு, கூட்டுறவுத் துறை

9. பெஸ்டஸ்பெரேராமின்சக்தி, எரிபொருள்.

10. எஸ். தொண்டமான் - புடைவை, கிராமியத் தொழில்துறை

11 ரணில் விக்கிரமசிங்க - வைத்தொழில்.

12. டாக்டர் ரஞ்சித் அத்துலத்து - தொழில், சமூகநலம்.

13. ஜோசப் மைக்கல் பெரேரா, கடற்றொழில், நீரியல் வளங்கள்;

14. டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார - கல்வி, கலாசாரத்துறை, தகவல்.

15. அலிக் அலுவிஹாரை - தபால் தொலைத் தொடர்புகள்.

16 நந்தா மத்திபு - இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை, அமைச்சர்.

17. ஏ. ஆர். மன்சூர் - வர்த்தக, கப்பற்றுறை.

18 யூ. பி. விஜேகுன் - பொதுநிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள்.

19 திருமதி ரேணுகா ஹெரத் - சுகாதாரம், மகளிர் விவகாரம்.

20. ஏ. எம். எஸ். அதிகாரி - கற்றலாத்துறை

21. சிரிசேன கூரே - விடமைப்பு, நிர்மாணத்துறை.

22 ரணில் விஜேரத்ன - வெளிவிவகாரம்.

பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும்

மானிப்பாய், பெப் 22
பரீட்சை ஆணையாளரின் பிரதிநிதிகளாக விளங்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் தமது கடமைகளை நேர்மையாகவும் சரியாகவும் செய்ய வேண்டும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாக இருக்கும் ஜீ. சி. ஈ. சாதாரணதரப்பரீட்சை சம்பந்தமாக உதவிப்பரீட்சை ஆணையாளர் திரு. சின்னத்துரை இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

ஜீ. சி. ஈ. சாதாரணதரப்பரீட்சைகளை பழைய பாடத்திட்டம் வெள்ளிக்கிழமையும், புதிய பாடத்திட்டம் சனிக்கிழமையும் ஆரம்பமாகின்றன.

யாழ்ப்பாணம், இளிநொச்சி மாவட்டங்களில் பரீட்சை மேற்பார்வையாளர்கள், இணைப்பு அதிகாரிகள், நிரந்தர நோக்குனர்களாக கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

உதவிப்பரீட்சைஆணையாளர் திரு. சின்னத்துரை மேலும் கூறியதாவது:-

பரீட்சை நடைபெறும் போது பல நோக்குநர்கள் கவனமின்றி நடந்து கொள்கின்றார்கள். கதைத்துக் கொண்டும், பத்திரிகைகள் வாசித்துக்கொண்டும், தையல் வேலைகளை செய்துகொண்டும் இருப்பதை கடந்தகால பரீட்சைகளில் நாம் அவதானிக்கமுடிந்தது.

அவர்கள் அவ்வாறு செய்யாமல், பரீட்சை எழுதும் மாணவர்களில் கவனம் செலுத்தியும், மேற்பார்வையாளர்களுக்கு உதவியாகவும் இருக்கவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார் யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் பிரதம விருந்தினராகவும், யாழ். ஆயர் பேரருள் திரு.வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கௌரவ விருந்தினராகவும் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட், யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி சிறப்பு விருந்தினர்களாகவும் விழாவில் கலந்து கொண்டனர்.

திருமதி சபாநாயகம் பரிசில்களை வழங்குவார். (இ-10)

அறிவுறுத்தல் கூட்டத்தில் உதவிப் பரீட்சை ஆணையாளர்

பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும்

பயிற்சி பெற்றவர் தனது

பொருளாதார நிலையை விருத்தி செய்ய முடியும்

பச்சிலைப்பள்ளி, பெப் 22
தொழிற்பயிற்சிபெறும் ஒருவர் தான்பெற்ற பயிற்சியை ஏனையோருக்கும் சொல்லிக் கொடுத்தால் சகலரும் அப்பயிற்சியைப் பெறமுடிகிறது. பயிற்சிபெற்றவர் தனது திறமைகளைவெளிப்படுத்திச் சொந்தப் பொருளாதார நிலையை விருத்திசெய்ய முடியும்.

இலங்கை மனிதாபிமான பொருளாதார புனரமைப்பு அபிவிருத்தி சேவை நிறுவன நிர்வாக இயக்குநர் எம் நாகராஜா புலியூரிலுள்ள இந்திராபுரம், செல்வபுரம் கிராமங்களுக்குத் தையல் மெஷின்களைக் கையளிக்கும் வைபவத்தில் பேசியபோது மேற்கண்டவாறு கூறினார்

இந்திராபுரம் மகளிர் சனசமூகநிலைய மண்டபத்தில் தலைவர் சிவகாசலை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உரையாற்றிய பலர் மேற்படி நிறுவனம் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்துவரும் சேவைகளைப் பாராட்டிப் பேசினர் (க.117)

பரீட்சை நல்லமுறையில் நடந்தேற சகலரும் ஒத்துழைப்புத் தாருங்கள் என அவர்கூறினர்.

யாழ்ப்பாணம் கல்வி திணைக்கள பிரதமகல்வி அதிகாரி திரு க. தந்தசாமியும் உரையாற்றினர். (இ-90)

பரஷையூரில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 22
பரஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

சங்கைக்குரிய சகோதரி மரிய கொறற்றி தலைமையில் விழா பிற்பகல்1மணிக்கு ஆரம்பமாகும்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் பிரதம விருந்தினராகவும், யாழ். ஆயர் பேரருள் திரு.வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கௌரவ விருந்தினராகவும் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட், யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி சிறப்பு விருந்தினர்களாகவும் விழாவில் கலந்து கொள்ள உள்ளனர்.

திருமதி சபாநாயகம் பரிசில்களை வழங்குவார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதிகள
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

22 02 1989 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
* தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
★ நெகட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

நெல்லியடியில் தாக்குதல் சம்பவம்

நெல்லியடியில் சென்றிவீல் இருந்த இராணுவத்தினர் மீது கடந்த திங்கட்கிழமை நண்பகல் சுமார் 12.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெல்லியடி மகாதிமா தியேட்டருக்கு அருகில் சென்றியிலிருந்த படையினர் மீதே லொறி ஒன்றில் வந்திறங்கிய குழு ஒன்று தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தை வடுத்து நேற்று நண்பகல் வரை நெல்லியடியில் பதற்றம் நிலவியது.

யாழ் — பருத்தித்துறைப் போக்குவரத்துச் சேவையும் வதிரிச் சந்தியூடாகவே இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தின் போது படையினர் தரப்பில் சேதம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. (உ-160)

இடம் பெயர்ந்தோருக்கு திருமலையில் 2,400 வீடுகள்

திருகோணமலை, பெப்.22

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் திருகோணமலையில் 2 ஆயிரத்து 400 வீடுகளை இடம் பெயர்ந்த குடும்பங்களுக்குக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதில் 600 வீடுகள் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய அகதிகளுக்கு வழங்கப்படும் என்றும் மிகுதி 1,800 வீடுகளும் உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது

குச்சவெளியில் சுமார் 200 வீடுகளை கட்டுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன வீடுகள் கட்டும் பணிகளை அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்கள் மேற்கொள்ளவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ- 150)

யாழ் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
ஆண்டுப் பொதுக்கூட்டம்

யாழ். இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் 08. 03. 1989 புதன்கிழமை பி. ப. 2.30 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. ச. பொன்னம்பலம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். ஏற்கனவே அறிவித்தவாறு இக்கூட்டம் 22 – 02 – 1989 அன்றுநடைபெறமாட்டாது.

இ. சங்கர்,
செயலாளர்

யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
21. 02. 1989. (C/1667)

அறிவித்தல்

இத்தால் சகலருமறிய, எனது கட்சிக்காரர், நடுத்தெரு ஒழுங்கை, அரியாலை சின்னையா துரைச்சாமியின் அறிவுறுத்தலின் பிரகாரம் அறியத்தருவது.

அரியாலை நடுத்தெரு ஒழுங்கையைச் சேர்ந்தவர்களும் தற்போது செட்டிய குறிச்சி, பூநகரியில் வசிப்பவர்களுமாகிய வல்லிபுரம் சுப்பிரமணியமும் பெண் யோகம்மாவுமாகிய இவர்கள், மேற்படி முகவரியைச் சேர்ந்தவரும், தற்போது வெளிநாட்டில் இருப்பவரும், எனது கட்சிக்காரரின் மருமகனுமாகிய இராசையா ஜெயச்சந்திரனுடன் 1984 இல் ஒரு காணி விற்பனை உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளார்களென்றும் இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் குறித்த வல்லிபுரம் சுப்பிரமணியமும் பெண் யோகம்மாவும் தமக்குச் சொந்தமானதும் அரியாலை நடுத்தெரு ஒழுங்கையில் அமைந்துள்ளதுமான ஆதனம் ஏறத்தாழ நி. பர. 2½ (இரண்டே முக்கால்) ஐ குறித்த இராசையா ஜெயச்சந்திரனுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா 1,50,000) க்கு அறுதியாக விற்க இணங்கியிருந்தார்களென்றும் இக்கிரயத்தின் ஒரு பகுதியாகவும் முற்பணமாகவும் ரூபா 54,000/- ஐ பணமாகப் பெற்றுள்ளார்களென்றும், குறித்த இராசையா ஜெயச்சந்திரனின் அறிவுறுத்தலின் பேரில் மிகுதிப் பணத்தைக் குறித்த வல்லிபுரம் சுப்பிரமணியத்திடம் கொடுத்து ஒரு முறையான அறுதியுறுதியை குறிக்க இராசையா ஜெயச்சந்திரனின் பேரில் முடித்துக்கொள்ள, எனது கட்சிக்காரர் குறித்த சின்னையா துரைச்சாமி பல முறை முயன்றும் குறித்த வல்லிபுரம் சுப்பிரமணியமும் பெண் யோகம்மாவும் இதற்கு மறுத்துவிட்டார்கள் என்பதுமாகும்.

எனவே, இதில் விபரிக்கப்பட்ட ஆதனம் ஒரு பிணக்குக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஆதனமென்பதையும், இக்குறித்த ஆதனம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதென்பதையும் அறியத்தருகின்றேன்.

இரங்கன்
சேவையிலுள்ள,
த. வேலாயுதம்,
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்.

ஸ்ரேசன் ரோட்,
சாவகச்சேரி.

(9526)

பொதுத் தேர்தலும் இலக்கம் பதின்மூன்றும்

கொழும்பு, பெப் 22

13 துரதிஷ்ட இலக்கமா?

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 43 பேருக்கு இலக்கம் 13 கொடுக்கப்பட்டது.

அவர்களில் 3 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர் ஏனையோர் தோல்வி கண்டனர்.

13 ஐ அதிர்ஷ்ட எண்ணாக அடைந்தவர்கள் கொழும்பு மாவட்டத்தில் வெற்றியிட்டிய திரு. எம். எஸ். செல்லச்சாமி (ஐ. தே. க.)யும், சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட நிமால் சிறிபால டி சில்வா, காலி மாவட்டத்தில் ஐ. தே. கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட வின்சன்ட் ஜெயவர்த்தனா ஆகியோர் ஆவர்.

ஏனையோருக்கு எண் 13 துரதிஷ்டமாகவே முடிந்தது. (ஒ-எ)

இடம் பெயர்ந்தோருக்கு திருமலையில் 2,400 வீடுகள்

பௌத்தம் கட்டாய பாடம்; துணையமைச்சர் முயற்சி!

கொழும்பு, பெப் 22

பௌத்த மாணவரின் பாடத்திட்டத்தில் பௌத்தம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் என்று சியாரிசு செய்யப்போவதாக பௌத்த சாசன துணை அமைச்சர் லால் கமகே தெரிவித்தார்.

பௌத்த சாசனத்தின் வளர்ச்சி, பாதுகாப்பு ஆகியன கருதி எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்பற்றிய விரிவான அறிக்கை ஒன்றை இன்னும் இரண்டு வாரங்களில் ஜனாதிபதிக்குச் சமர்பிக்க எண்ணி இருப்பதாகவும் இணை அமைச்சர் லால் கமகே சொன்னார். (உ-எ)

தோட்ட அதிகாரி சுட்டுக்கொலை

கொழும்பு, பெப் 22

ஹப்ரதுவவில் உள்ள விலாஹென தோட்டத்தின் சூரின்டென் ரஞ்சித் டயஸ் கடந்த சனி இரவு தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது பங்களாவில் வைத்தே இச்சம்பவம் இடம்பெற்றது. (உ-எ)

மலையகத்தில் புதிய கட்சி உதயம்

கொழும்பு, பெப் 22

மலையகத்தில் புதிய அரசியல் கட்சி ஒன்று நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'மலையக மக்கள் முன்னணி' என்பது புதிய கட்சியின் பெயர்.

புளொட் அமைப்பின் ஆதரவாளர்கள் இக்கட்சியை ஆரம்பித்திருப்பதாக பி. பி. சி செய்தியாளர் அறிவித்தார்.

அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளராகப் போட்டியிட்டு சுமார் 10 ஆயிரம்வாக்குகளைப் பெற்ற திரு. சந்திரசேகரன் எம்பவர் தான் இக்கட்சியின் முக்கியஸ்தர் என்று கூறப்பட்டது.

கடந்த வாரம் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மலையக மக்களின் பிரதிநிதிகளுக்கு நாடாளுமன்றத்தில் உரிய பங்கு பெற முடியாத நிலை ஏற்பட்டது தெரிந்ததே.

அதனால் ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவே புதிய அரசியல் கட்சி உருவாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

மோகன் விடுதலையானார்

ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த மோகன் நேற்று விடுதலை செய்யப் பட்டார்.

இவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப் பட்டிருந்தார். (உ-51)

உத்தரவு

கொழும்பு பெப் 22

சிறைச்சிறை திருத்த நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும்படி நீதித்துறைத்துணை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவிற்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

லலித், விஜயதுங்க நேற்று பதவியேற்பு

கொழும்பு, பெப். 22

உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, நிதி அமைச்சர் திரு. டி. பி. விஜயதுங்க ஆகியோர் நேற்று உத்தியோக பூர்வமாக தமது பதவியை ஏற்றனர்.

அமைச்சர்கள் தமது அமைச்சு அலுவலகங்களுக்குச் சென்று உயர் அதிகாரிகளுடன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசித்தனர்.

அமைச்சில் இடம் பெற்ற மத வைபவங்களிலும் அமைச்சர்கள் இருவரும் கலந்து கொண்டனர். [ஒ]

அங்குரார்ப்பணம்

புதுடில்லி, பெப் 22

இந்திய நாடாளுமன்றத்தின் வரவு செலவுத் திட்ட கூட்டத்தொடர் நேற்று ஜனாதிபதி இராமசாமி வெங்கட்ராமனால் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது.

மரண அறிவித்தல்கள்

திரு. சிவசிதம்பரம்பிள்ளை பாலசுப்பிரமணியம்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திரு சிவசிதம்பரம்பிள்ளை பாலசுப்பிரமணியம் [இளைப்பாறிய பிரதிப் பிரதம கணக்காளர் இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி] 20-2-89 இல் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற தையல்நாயகத்தின் அன்புக் கணவரும், யோகராணி, காலஞ்சென்ற புஸ்பராணி, ஸ்ரீஸ்கந்தராசா [ஓவிக் கந்தோர், திருகோணமலை], ஸ்ரீவிக்கினராசா [UK] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சண்முகராசா [இளைப்பாறிய நீர்ப்பாசன இலகாப் பிரதி இயக்குனர்], நடராசா குமாரசாமி [பிரதி ஆணையாளர் வருமானவரி இலாகா, மட்டக்களப்பு], பத்மதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதர்சன், சசிகலா, தனுஷன், சதீஷன், சயந்தன், சிவானி புஸ்பா, அகிலா ஆகியோரின் பேரனும், சிவனுஜன், துவாரகா ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-2-89 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பா. ஸ்ரீஸ்கந்தராசா
தயாற்கந்தோர் வீடு,
கோண்டாவில் [9528]

வினாசித்தம்பி சுபதிப்பிள்ளை

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் கண்டுக்குளியி வசிப்பவருமான குளியாப்பிட்டி சுபதி பிள்ளை அவர்கள் 19. 2 89இல் காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி-கண்ணம்மா ஆகியோரின் மருமகனும், மா. கந்தையா – பாரவதிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், ராசமணியின் அன்புக்கணவரும், காலம் சென்ற குளியாப்பிட்டி சந்தையா அப்புக்குட்டி ஆகியோரின் அன்பு மருமகனும், சுந்தரமூர்த்தி (U K), திருஞானசம்பந்தன், யாமினி(U K), கலாதி U.S A) மஞ்சுளாவதி (யாழ் பல்கலைக்கழகம் கணிப்பீடம் 2ம் ஆண்டு), கமலாவதி ஜனனன், சிறீராஜ், (யாழ்- பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் நிருமதி பாக்கியம், குளியாப்பிட்டி ஆறுமுகம் காராளபிள்ளை, சின்னத்தங்கம், நாகம்மா, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், பரராசசிங்கம் மீனாக்கி, மகிகையம்பரசிவிவேகானந்தன், புவிதவதி ஆகியோரின் மைத்துனரும், Dr தயமோகன் சாந்தி (U K), யோகநாதன் U S A), றஞ்சி ஆகியோரின் மாமனாரும், வித்தியானந்தி செந்தூரன், குஜீவன், நிரோமி, அஜிந்தன், நிஷா ஆகியோரின் சின்னப்பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகை 23 2 89 வியாழக்கிழமை மாலை4மணிக்கு அன்னாரின் இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்தண்டியமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருஞானசம்பந்தர்.

(9527)

சக்கரவர்த்தியின் இறுதிச்சடங்கு:

ஜெயவர்த்தனா இன்று ஜப்பான் புறப்படுகிறார்

திருகோணமலை, பெப் 22

கொழும்பு, பெப் 22

ஜப்பானிய சக்கரவர்த்தி ஹிரோ ஹற்டோவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா இன்று டோக்கியோ புறப்படுகிறார்.

ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாசவின் பிரதிநிதியாகவே திரு. ஜெயவர்த்தனா அங்கு செல்கிறார்.

ஜப்பானிய சக்கரவர்த்தியின் இறுதிச்சடங்குகள்எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

திரு. ஜெயவர்த்தனா, புதிய சக்கரவர்த்தி மற்றும் பிரமுகர்களையும் சந்தித்து உரையாடுவார். (ஒ)

3 ஆண்டுகள் பூர்த்தி

மாஸ்கோ, பெப் 22

சோவியத் யூனியனால் 'மிர்' என்ற விண்வெளி நிலையம் விண்வெளிக்கு செலுத்தப்பட்டு நேற்று முன்தினத்துடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின.

இந்த விண்வெளி நிலையத்துடன் மேலும் இரண்டு 'மொடியூல்' திட்டங்களை இணைப்பதற்கு சோவியத் அதிகாரிகள ஏற்பாடு செய்து வருகிறார்கள். (ஒ-எ)

கோபாலசாமி ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கிறது.

அதனால் திரு. கோபாலசாமியின் பயணம் குறித்து அவையில் திட்டவட்டமாக இப்போது தெரிவிப்பதற்கு எதுவும் இல்லை''

இந்திரா காங்கிரஸ் எம். எல் ஏ குமரி அனந்தன் திரு. கோபாலசாமியின் இலங்கைப்பயணம் பற்றி அவையில் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் கருணாநிதி முன்கண்ட தகவலைக் வெளியிட்டார். (உ-எ)

கொழும்புப் பகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேர் காயமடைந்தனர்.

★ தெஹிவளை பகுதியில் கொல்லப்பட்டவர்களில் அரச ஆதரவாளர் ஒருவரும் பொலீஸ்காரர் ஒருவரும் பஸ் ஊழியர் ஒருவரும் அடங்குகின்றனர்.

* மாத்தறை கண்டி ஆகிய இடங்களில் வேலை நிறுத்தப் போராட்டத்தோடு ஊரடங்குச் சட்டத்தையும் அமுல் நடத்தி இருந்தனர்.

* பல இடங்களில் வேலைநிறுத்தம் அமைதியாக நடைபெற்றது.

ரயில் நிலையம் அருகே

★ கொழும்பு கோட்டை ரயில் நிலயத்திற்கு அருகேயும் குண்டுகள் வீசப்பட்டன. இதனால் மக்கள் பீதியடைந்தனர்.

★ இரைத் தொடர்ந்து தமிழ் முஸ்லிம் கடைகள் பல மூடப்பட்டன.

எனினும் சிங்களவர்களுக்குச் சொந்தமான கடைகள் திறந்திருந்தன.

தாக்குதல்

★ பஸ்களில் பயணம் செய்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

பாதுகாப்பு

★ குண்டு வீசசு, தீவைப்புச் சம்பவங்கள் நடைபெற்ற பல பகுதிகளில் உள்ள கடைகள், தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டன,

★ எவினும் அரச அலுவலகங்கள் பலவற்றுக்குப் பாதுகாப்புப் படையினர் விரைந்து சென்று பாதுகாப்பு வழங்கினர். அதனால் அவை ஓரளவு இயங்கியன.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஆட்சேபம் தெரிவிக்கு முகமாக நேற்று வேலை நிறுத்தம் செய்யும்படி அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு ஜே வி பி. இயக்கம் அழைப்பு விடுத்திருந்தது. அதோடு போக்குவரத்தை நிறுத்தி ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறும் அது சுவரொட்டிகள் மூலம் கேட்டிருந்தது

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியன நடந்து முடிந்த பிறகு ஜே வி பி. இயக்கத்தினர் நடத்திய பெரிய நடவடிக்கை நேற்று இடம்பெற்ற வேலைநிறுத்தம் என்று சொல்லப்படுகிறது. (அ எ 10)

பரீட்சார்த்தி, ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ய ழ்ப்பாணத்தில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தமது சுட்டெண்களையும் பரீட்சைமண்டபங்களையும் அறிந்துகொள்ளலாம்.

இதற்கென பரீட்சைத் திணைக்களத்தில் விசேட பிரிவு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் தாம் விண்ணப்பித்த தபால கத்தில் பெயரையும் பற்றுச்சீட்டு இலக்கத்தையும் தமது பெயரையும் தொலைபேசிமூலம் விசேட பிரிவுக்குத் தெரியப்படுத்தினால் சிலநிமிடங்களில் அவருடைய சுட்டென், பரீட்சைமண்டபம் ஆகிய விவரங்கள் அறிவிக்கப்படுமாம். (ஒ-10)

புதிய.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதவிக்கு ஒருவர் நிறுத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

ஆளும் கட்சிக்கு 25 அதிகப்பெரும்பான்மை இருப்பதால் ஜனாப் முஹம்மத் சபாநாயகராக தெரிவு செய்யப்படுவதில் அவ்வளவு கஷ்டமிராது என்று கூறப்படுகிறது. (உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் [தனியார் கம்பனி] யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt.) Ltd. 292/2 Navalar Road, Jaffna. Wednesday 22nd February 1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org